**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி.**
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 16–ம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண். 144/2023**

**CNR No. TNMY06-000097-2023**

ஏ. முகம்மது சர்புதீன் ..வாதி

...எதிர்...

1. மெஹருன்னிசா
2. சார்பதிவாளர்,
   தரங்கம்பாடி. ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.130/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, மாண்புமிகு நாகப்பட்டினம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் 08.11.2022 ம் தேதியிட்ட A.No.332/2022_ உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, அசல் வழக்கு எண்.144/2023 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பாக 12.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஏ. கபீர் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. டி. விஜயகுமார் அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா சொத்தை பொருத்து வாதி கடந்த 13.03.2006ம் தேதியில் 1ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிவைக்கப்பட்ட நிபந்தனையுடன் கூடிய ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்து விளம்புகை செய்து உத்தரவிட வேண்டியும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தினை ரத்து செய்து 2ம் பிரதிவாதி

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:48:04 +0530

அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவண எண்.161/2006 பதிவை நீக்கரவு செய்ய 2ம் பிரதிவாதிக்கு எதிராக செலுறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், செலவுத் தொகை வேண்டியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதியின் வழக்குரைச் சுருக்கம்:**

தாவா சொத்து தரங்கம்பாடி தாலுக்கா திருக்களாச்சேரி கிராமம், பாத்திமா தெரு வட சரகில் அளவாகியுள்ள புஞ்சை சர்வே எண்.128/29ல் 18 1/2 செண்டுக்கு 8066 சதுரடியில் அமைந்துள்ள மனையும் அதில் கட்டப்பட்டுள்ள ஆர்.சி.சி மாடி வீடு மற்றும் அதில் உள்ள மரந்தழை வகையறா உள்பட ஆகும். வாதி மற்றும் முதல் பிரதிவாதி கணவன் மனைவி உறவு முறை ஆவார்கள். தாவா சொத்து வாதியின் தகப்பனார் அப்துல் சமது என்பவருக்கு சொந்தமானதாக இருந்து அவரது இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகளான வாதிக்கும், அவரின் சகோதர சகோதரிகளுக்கும் வாரிசு என்ற முறையில் கிடைக்கப்பெற்று அனுபவித்து வந்துள்ளனர். வாதிக்கு சகோதரர் மற்றும் அவருடைய சகோதரிகளிடமிருந்து 06.05.1993ம் தேதியில் பாக பாத்திய விடுதலை பத்திரம் மற்றும் கிரய சாசனம் பெற்று, அது முதல் தாவா சொத்தை ஏகதேச பாத்தியத்துடன் அனுபவித்து வந்துள்ளார். தாவா சொத்திலிருந்த பழை ஓட்டு வீட்டை இடித்து விட்டு வாதியின் சுய சம்பாத்தியத்தில் ஆர்.சி.சி வீடு கட்டி தனிப்பட்ட அனுபவத்திலும், சுவாதீனத்திலும் வைத்து அனுபவித்து வரப்படுகிறது. தாவா சொத்திற்குண்டான பட்டா, வரி விதிப்பு, மின் இணைப்பு ஆகியவை வாதியின் பெயரிலேயே இருந்து வருகிறது. வாதி பிரான்சில் பணிபுரியும் போது வியட்நாம் பெண்மணி Thi Hong Hoa Nguyen யை 20.07.1991ல் திருமணம் செய்து கொண்டுள்ளார். அவர் மூலமாக ஷாஜதாபானு என்ற பெண் பிறந்து பிரான்சில் வசித்து வருகிறார். வாதியின் முதல் மனைவியான வியட்நாம் பெண்மணி வாதியிடமிருந்து 26.01.1996ல் விவாகரத்து பெற்றுவிட்டார். அதன் பிறகு வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் கடந்த 28.08.1998ல் காரைக்கால் மஸ்தான் பள்ளியில் ஜமாத்தார்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றுள்ளது. முதல் பிரதிவாதிக்கு அவரது முதல் கணவர் மூலம் அப்துல் ரஜாக் என்ற ஆண் மகன் உள்ளார். முதல் பிரதிவாதி அவரது முதல் கணவரிடமிருந்து 1996–ல் விவாகரத்து ஆனபிறகு வாதியை திருமணம் செய்து கொண்டுள்ளார். மேற்படி முதல் பிரதிவாதி மகன் அப்துல் ரஜாக் திருமணம் செய்து கொண்டு காரைக்காலில் வாழ்ந்து வருகிறார். வாதிக்கும், முதல்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:48:10 +0530

பிரதிவாதிக்கும் திருமணமாகி சுமார் 16 ஆண்டுகள் நல்ல முறையில் குடும்பம் நடத்தி வந்துள்ளனர். இருவருக்கும் குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை. 1ம் பிரதிவாதி வாதியை நல்லவிதமாக பராமரித்தும், அதரவாகவும் இருப்பார் என்று எண்ணி அவர் மேல் இருந்த பிரியத்தின் பேரில் தாவா சொத்தினை கடந்த 13.03.2006 ம் தேதியில் ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். மேற்படி ஆவணத்தில் வாதி தன் ஆயுள்வரை மேற்படி வீட்டில் வசிக்கும் உரிமையை தக்க வைத்துக்கொண்டு, மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணப்பத்திரத்தை எழுதி வைத்துள்ளார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் வாதி ஆயுள்வரை குடியிருக்கும் உரிமையை தக்க வைத்துக்கொண்டு எழுதி வைத்த விவரம் 1ம் பிரதிவாதி தெரிந்து கொண்டு, 1ம் பிரதிவாதியும், அவருடைய மகன் அப்துல் ராஜாக்கும் நிபந்தனையில்லாமல் 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைக்க வேண்டுமென்றும் இல்லையென்றால் கொலை செய்துவிட போவதாக மிரட்டியுள்ளனர். இந்நிலையில் 2016ம் ஆண்டு ஜனவரி மாதம் வாதி பிரான்ஸ் நாட்டிலிருந்து திருக்களாச்சேரியில் உள்ள வீட்டிற்கு திரும்பி வந்திருந்த சமயத்தில் முதல் பிரதிவாதி வீட்டிலிருந்த நகைகள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை வாதிக்கு தெரியாமல் திருடி கொண்டு காரைக்காலில் உள்ள அவரது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், அதன் பின்னர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து மேற்படி உடமைகள் மீட்கப்பட்டு உள்ளது. மேலும் வாதியை வெளிநாடு போகவிடாமல் தடுக்கவும், நிபந்தனையில்லாமல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வாங்கும் நோக்கில் அவ்வாறு செய்த விபரம் தெரியவந்துள்ளது. கடந்த 2016 மற்றும் 2018 ஆண்டுகளில் வாதி, 1ம் பிரதிவாதி தனக்கு ஆதரவாக இருந்து தன்னை பராமரித்து பாதுகாக்க வேண்டுமென்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதனை பெற்றுக்கொண்டு முதல் பிரதிவாதி மற்றும் முதல் கணவரின் மகன் ஆகியோர்கள் அடியாட்களுடனும், பயங்கர ஆயுதங்களுடனும் வந்து அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தை ஒப்படைக்க வேண்டுமென்றும், நிபந்தனையை நீக்கி புதிதாக 1ம் பிரதிவாதி பெயருக்கு செட்டில் மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டும். தாவா சொத்தின் அனுபோகத்தை ஒப்படைக்க வேண்டுமென்றும், இல்லை என்றால் கொலை செய்து விடபோவதாகவும் அச்சுறுத்தி வந்துள்ளனர். 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினர் மூலம் வாதியின்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:48:17 +0530

உயிருக்கும் உடமைக்கும் பங்கம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உள்ளதால் கடந்த 09.10.2018 ம் தேதியில் பிரதிவாதி மற்றும் அவரை சார்ந்தவர்கள் மீது நாகப்பட்டினம் காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு எழுத்து மூலமாக புகார் அளிக்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி மனைவி என்ற முறையில் வாதியை நன்றாக பராமரித்து வருவார் என்ற நம்பிக்கையில் 13.03.2006 ம் தேதியில் ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். தாவா சொத்து நாளது தேதி வரை வாதியின் வசம் இருந்து வருகின்றது. வாதி தன் ஆயுள் வரை மேற்படி உரிமையை தக்க வைத்துக்கொண்டு ஹிபா என்கிற தான செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். தாவா சொத்தை அடையும் பொருட்டு வாதியின் நலனுக்கு விரோதமாக 1ம் பிரதிவாதி செயல்பட்டு வருவதால் 1ம் பிரதிவாதிக்கு, வாதி எழுதி வைத்த ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்வது அவசியமாக உள்ளது. எனவே வாதி தாவா சொத்து குறித்து 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யக் கோரியும், 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவண எண்.161/2006 பதிவை நீக்கி 2ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்.</u>

வாதியின் வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கதக்கதல்ல. முதல் பிரதிவாதி நேரடியாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளும் தவறானதும், உண்மைக்கு புறம்பானது. இதனை வாதி நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார். வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் உறவு முறையை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் வாதிக்கு ஏற்கனவே 2ம் திருமணம் நடந்து வாதியின் கொடுமைகளால் இருவரும் பிரிந்து சென்றுவிட்டனர் என்பதை மறைத்து, மூன்றாவதாக 1ம் பிரதிவாதியை திருமணம் செய்து கொண்டுள்ளார். 1ம் பிரதிவாதி வாதியிடம் அன்பாகவும், அனுசரணையாகவும் நல்ல மனைவியாக நடந்து கொண்டதால் வாதியே வழக்கு சொத்தை சட்டப்படி பதிவு செய்து 1ம் பிரதிவாதியிடம் வசம் ஒப்படைத்து விட்டார். அதுமுதல் வழக்கு சொத்தின் முழு உரிமையாளர் என்ற முறையில் 1ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை வசம்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:48:22 +0530

எடுத்துக்கொண்ட போதிலும், வாதியின் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றும், ஹிபா செட்டில்மெண்ட் ஆவணப்படி இருவரும் ஒன்றாக தான் தாவா சொத்தில் இருந்து வந்தனர் என்பது உண்மை. 1ம் பிரதிவாதி மனைவி என்ற முறையில் வாதியை நல்ல முறையில் பராமரித்து வந்தார். வாதியின் நம்பிக்கைக்கு மாறாக 1ம் பிரதிவாதி செயல்படவில்லை. வாதி தன் மனைவி 1ம் பிரதிவாதியை பாதுக்காக்காமல் கொடுமைக்கு உட்படுத்தி வந்துள்ளார். சில சமயங்களில் 1ம் பிரதிவாதியை சந்தேகப்பட்டு வெளியே செல்லும் போது வீட்டை பூட்டிவிட்டு சென்று விடுவார். வாதி மனமாறி பின்னிட்டு 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை மாற்றி எழுதி வைக்க கேட்டு 1ம் பிரதிவாதியை காட்டுமிராண்டி தனமாக அடித்துள்ளார். வாதி அவரது இரண்டு மனைவிகளையும் அடித்து துரத்தியது போல் 1ம் பிரதிவாதியையும் அடித்து விவாகரத்து செய்துவிட போவதாகவும் மிரட்டியுள்ளார். இது குறித்து ஊர் பஞ்சாயத்தாரிடம் சொல்ல அவர்களது அறிவுறுத்தலின் படி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். திருக்காளச்சேரி பஞ்சாயத்தார்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 1ம் பிரதிவாதி புகார் ஏதுவும் தெரிவிக்கவில்லை. வாதி, 1ம் பிரதிவாதியை திருமணம் செய்து அழைத்து சென்ற பிறகு 1ம் பிரதிவாதியின் நகைகளை விற்று வந்த பணத்தை கொண்டு வாதி ஆர்.சி.சி. வீடு கட்டப்பட்டது. அதன் வாதி பிறகு 2016ம் வருடம் 1ம் பிரதிவாதியை அடித்ததால் உயிரை காப்பாற்றிக் கொள்ள காரைக்காலில் உள்ள அவரது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டார். அதன் பிறகு ஒன்றாக சேர்ந்து வாழ வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு விளக்கம் அளித்து 1ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதன் பிறகு இருதரப்பு வழக்கறிஞர்கள் மூலம் சமாதானம் பேசி இருவரும் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளனர். அதன் பிறகு சில நாட்கள் கழித்து வாதி வெளிநாடு சென்றுவிட்டு 2018ம் ஆண்டு வாதி வெளிநாட்டிலிருந்து வந்து சிறிது காலத்தில் 1ம் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்து அடித்து அனுப்பிவிட்டு தவறான சங்கதியின் அடிப்படையில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதன் பிறகு ஊர் ஜமாத்தார்கள் தலையிட்டு இருவரையும் சேர்த்து வைத்து வாதி செய்த கொடுமைகளை மறந்து இருவரும் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளனர். அதன் பிறகு 2019ம் வருடம் 1ம் பிரதிவாதியை அடித்து காரைக்காலில் உள்ள அவரது தாயார் வீட்டிற்கு அனுப்பிவிட்டார். அந்த காலக்கட்டத்தில் வாதி

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:48:28 +0530

காரைக்காலை சேர்ந்த மொஹைதீன் பீவி என்ற பெண்ணை அழைத்து வந்து தாவா வீட்டில் வைத்து குடும்பம் நடத்தி வந்துள்ளார். இந்த விவரம் ஊர்காரர்கள் மூலம் தெரிய வந்து வாதியிடம் கேட்டதற்கு அவரிடமும் பிரச்சனை ஏற்பட்டதால் பிரிந்து சென்றுவிட்டார் என்று கூறிவிட்டார். அதன் பிறகு வாதியும், 1ம் பிரதிவாதியும் சுமூகமாக சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளனர். அதன் பின்னிட்டு 1ம் பிரதிவாதிக்கு தெரியாமல் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்து விட்டு வெளிநாடு சென்றுவிட்டார். நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையை பற்றி வாதியிடம் கேட்டதற்கு கோபத்தில் வழக்கினை தாக்கல் செய்து விட்டேன். வழக்கினை வாபஸ் பெற்றுவிடுகிறேன் என கூறிவிட்டு அதன் படி நடந்து கொள்ளாவில்லை. வாதி 1ம் பிரதிவாதிக்கு பல வகையில் மன உளைச்சலை கொடுத்து வந்தாலும், மனைவி செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து தவறவில்லை. 13.03.2006ம் தேதியிட்ட ஹிபா செட்டில்மெண்ட் பத்திரப்படி வாதி தாவா சொத்தில் வசித்து வருவதை தடுக்கவோ மற்றும் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. வாதி எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் 1ம் பிரதிவாதி முழு உரிமையாளராக வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார். எனவே இவ்வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யக்கோரியுள்ளார்.

**<u>4. இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டுள்ளன.</u>**

1. 13.03.2006 தேதியிட்ட ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் பத்திரம் உண்மையானதா, செல்லக்கூடியதா வாதியைக் கட்டுப்படுத்தக்கூடியதா?

2. வழக்கில் கோரி உள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா ?

3. வழக்கில் கோரியுள்ள 2ம் பிரதிவாதிக்கு எதிரான செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

4, வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

**5.** இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1ம் பிரதிவாதி தரப்பில் முகமது ரஃபீக் என்பவர் பி.வா.சா.1 ஆகவும்,

MUMTAJ
Digitally signed by MUMTAJ
Date: 2026.03.16 18:48:34 +0530

1ம் பிரதிவாதி நீதிமன்ற அனுமதியின் பேரில் பி.வா.சா.2 ஆகவும், மும்தாஜ் பேகம் என்பவர் பி.வா.சா.ஆ.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1 முதல் பி.வா.சா.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் இரண்டாம் பிரதிவாதி ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

6. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தம்முடைய எழுத்து மூலமான வாதுரையில் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், 13.03.2006 ம் தேதியில் வாதி அவருடைய மனைவியான முதல் பிரதிவாதிக்கு ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளதாகவும், வாதிக்கும், முதல் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையம் வரை சென்று வந்ததாகவும், ஜாமாத்தில் இருவருக்கும் பஞ்சாயத்து பேசப்பட்டதாகவும், 1ம் பிரதிவாதி தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலேயே ஒப்புக்கொண்டுள்ளனர் என்றும், மேலும் வழக்கு சொத்து வாதியின் பூர்வீக சொத்து என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே வாதியின் நேரடி வாரிசுகள் உயிருடன் இருக்கும் போது 1ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை பொருத்து ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க வேண்டிய அவசியமில்லை என்றும், இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு தாகராறு ஏற்பட்டது ஊர்சிதமாகி இருப்பதால், 13.03.2006 தேதியிட்ட ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லக்கூடியதல்ல என்றும், வாதிக்கு வழக்கு சொத்தை தவிர வேறு சொத்து இல்லை என்றும், வாதி ஒரு மூத்த குடிமகன் என்றும், வழக்கில் கோரியுள்ள படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியுள்ளார்.

7. முதல் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தம்முடைய வாதுரையில் வழக்கு சொத்து வாதிக்கு தனிப்பட்ட உரிமையுடன் பாத்தியப்பட்டிருந்து மனைவி என்ற முறையில் முதல் பிரதிவாதிக்கு 13.03.2006 ம் தேதியில் வழக்கு சொத்துக் குறித்து ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி சுவாதீனம் ஒப்படைத்துள்ளதாகவும், மேற்படி ஆவணத்திலேயே எக்காரணம் கொண்டும் பத்திரத்தை மாற்றவோ, ரத்து செய்யவோ தனக்கு அதிகாரம் இல்லை என்று வாதி எழுதி

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:48:40 +0530

வைத்துள்ளார் என்றும், மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய ஆவணம் ஏற்பட்ட காலத்திலிருந்து 3 ஆண்டுகளுக்குள் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென்றும், எனவே இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வா.சா.ஆ.5 ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணப்படி முதல் பிரதிவாதி வழக்கு சொத்தின் சுவாதீனம் அடைந்து முழு உரிமையாளராக அனுபவித்து வருகிறார் என்றும், எனவே வாதியின் வழக்கை தள்ளுபடி செய்யுமாறு வாதுரைத்து தனது வாதுரைக்கு ஆதரவாக AIR 1964 ORI 212 மற்றும் AIR 1964 ORISSA 212 என்ற சட்ட முன்தீர்ப்புகளை முன்னிட்டுள்ளார்.

**<u>8. எழுவினா 1–க்கான தீர்வு:</u>**

வாதி தரப்பு வழக்கானது தாவா சொத்து தரங்கம்பாடி தாலுக்கா, திருக்களாச்சேரி கிராமம், பாத்திமா தெரு, வட சரகில் அளவாகியுள்ள புஞ்சை சர்வே எண்.128/29 ல் 18 1/2 செண்டுக்கு 8066 சதுரடியில் அமைந்துள்ள மனையும் அதில் கட்டப்பட்டுள்ள ஆர்.சி.சி மாடி வீடு மற்றும் அதில் உள்ள மரந்தழை வகையறா உள்பட என்றும், வாதி மற்றும் முதல் பிரதிவாதி கணவன் மனைவி உறவு முறை என்றும், தாவா சொத்து வாதியின் தகப்பனார் அப்துல் சமது என்பவருக்கு சொந்தமானதாக இருந்து அவரது இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகளான வாதிக்கும், அவரின் சகோதர சகோதரிகளுக்கும் வாரிசு என்ற முறையில் கிடைக்கப்பெற்று அனுபவித்து வந்ததை, வாதி அவருடைய சகோதரர் மற்றும் சகோதரிகளிடமிருந்து 06.05.1993 ம் தேதியில் பாக பாத்திய விடுதலை பத்திரம் மற்றும் கிரய சாசனம் மூலம் பெற்று, அது முதல் தாவா சொத்தை ஏகதேச பாத்தியத்துடன் அனுபவித்து வந்து, தாவா சொத்திலிருந்த பழை ஓட்டு வீட்டை இடித்து விட்டு வாதியின் சுய சம்பாத்தியத்தில் ஆர்.சி.சி வீடு கட்டி தனிப்பட்ட அனுபவத்திலும், சுவாதீனத்திலும் வைத்து அனுபவித்து வரப்படுகிறது என்றும், தாவா சொத்திற்குண்டான பட்டா, வரி விதிப்பு, மின் இணைப்பு ஆகியவை வாதியின் பெயரிலேயே இருந்து வருகிறது என்றும், வாதி பிரான்சில் பணிபுரியும் போது வியட்நாம் பெண்மணி Thi Hong Hoa Nguyen யை 20.07.1991 தேதியில் திருமணம் செய்து கொண்டதாகவும், அவர் மூலமாக ஷாஜதாபானு என்ற பெண் குழந்தை பிறந்து பிரான்சில் வசித்து வருகிறார் என்றும், வாதியின் முதல் மனைவியான வியட்நாம்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:48:47 +0530

பெண்மணி வாதியிடமிருந்து 26.01.1996ல் விவாகரத்து பெற்றுவிட்டதாகவும், அதன் பிறகு வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் கடந்த 28.08.1998ல் காரைக்கால் மஸ்தான் பள்ளியில் ஜமாத்தார்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றதாகவும், முதல் பிரதிவாதிக்கு அவரது முதல் கணவர் மூலம் அப்துல் ரஜாக் என்ற ஆண் மகன் உள்ளார் என்றும், முதல் பிரதிவாதி அவரது முதல் கணவரிடமிருந்து 1996–ல் விவாகரத்து ஆனபிறகு வாதியை திருமணம் செய்து கொண்டதாகவும், மேற்படி முதல் பிரதிவாதி மகன் அப்துல் ரஜாக் திருமணம் செய்து கொண்டு காரைக்காலில் வாழ்ந்து வருவதாகவும், வாதிக்கும், முதல் பிரதிவாதிக்கும் திருமணமாகி சுமார் 16 ஆண்டுகள் நல்ல முறையில் குடும்பம் நடத்தி வந்ததாகவும், இருவருக்கும் குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை என்றும், 1ம் பிரதிவாதி வாதியை நல்லவிதமாக பராமரித்து அதரவாகவும் இருப்பார் என்று எண்ணி அவர் மேல் இருந்த பிரியத்தின் பேரில் தாவா சொத்தினை கடந்த 13.03.2006 ம் தேதியில் ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததாகவும், மேற்படி ஆவணத்தில் வாதி தன் ஆயுள் வரை மேற்படி வீட்டில் வசிக்கும் உரிமையை தக்க வைத்துக்கொண்டு, தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததாகவும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் வாதி ஆயுள் வரை குடியிருக்கும் உரிமையை தக்க வைத்துக்கொண்டு எழுதி வைத்த விவரம் 1ம் பிரதிவாதி தெரிந்து கொண்டு, 1ம் பிரதிவாதியும், அவருடைய மகன் அப்துல் ரஜாக்கும் நிபந்தனையில்லாமல் 1ம் பிரதிவாதிக்கு ஆவணம் எழுதி வைக்க வேண்டுமென்றும், இல்லையென்றால் கொலை செய்துவிட போவதாக மிரட்டியதாகவும், இந்நிலையில் 2016ம் ஆண்டு ஜனவரி மாதம் வாதி பிரான்ஸ் நாட்டிலிருந்து திருக்களாச்சேரியில் உள்ள வீட்டிற்கு திரும்பி வந்திருந்த சமயத்தில் முதல் பிரதிவாதி வீட்டிலிருந்த நகைகள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை வாதிக்கு தெரியாமல் திருடிக் கொண்டு காரைக்காலில் உள்ள அவரது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், அதன் பின்னர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து மேற்படி உடமைகள் மீட்கப்பட்டு உள்ளது என்றும், மேலும் வாதியை வெளிநாடு போகவிடாமல் தடுக்கவும், செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வாங்கும் நோக்கில் அவ்வாறு செய்த விபரம் தெரியவந்தது என்றும், கடந்த 2016 மற்றும் 2018 ஆண்டுகளில் வாதி, 1ம் பிரதிவாதி தனக்கு ஆதரவாக இருந்து தன்னை பராமரித்து

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:48:53 +0530

பாதுகாக்க வேண்டுமென்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதனை பெற்றுக்கொண்டு முதல் பிரதிவாதி மற்றும் அவரது முதல் கணவரின் மகன் ஆகியோர்கள் அடியாட்களுடனும், பயங்கர ஆயுதங்களுடனும் வந்து அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தை ஒப்படைக்க வேண்டுமென்றும், நிபந்தனையை நீக்கி புதிதாக 1ம் பிரதிவாதி பெயருக்கு செட்டில் மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டும் என்றும், தாவா சொத்தின் அனுபோகத்தை ஒப்படைக்க வேண்டுமென்றும், இல்லை என்றால் கொலை செய்து விடபோவதாகவும் அச்சுறுத்தி வந்ததாகவும், 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினர் மூலம் வாதியின் உயிருக்கும் உடமைக்கும் பங்கம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உள்ளதால் கடந்த 09.10.2018ம் தேதியில் பிரதிவாதி மற்றும் அவரை சார்ந்தவர்கள் மீது நாகப்பட்டினம் காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு எழுத்து மூலமாக புகார் அளிக்கப்பட்டதாகவும், 1ம் பிரதிவாதி மனைவி என்ற முறையில் வாதியை நன்றாக பராமரித்து வருவார் என்ற நம்பிக்கையில் 13.03.2006 ம் தேதியில் ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததாகவும், தாவா சொத்து நாளது தேதி வரை வாதியின் வசம் இருந்து வருகின்றதென்றும், வாதி தன் ஆயுள் வரை மேற்படி உரிமையை தக்க வைத்துக்கொண்டு ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளதாகவும், தாவா சொத்தை அடையும் பொருட்டு வாதியின் நலனுக்கு விரோதமாக 1ம் பிரதிவாதி செயல்பட்டு வருவதால் 1ம் பிரதிவாதிக்கு, வாதி எழுதி வைத்த ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்வது அவசியமாக உள்ளது என்றும், எனவே வாதி தாவா சொத்து குறித்து 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்து, 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவண எண்.161/2006 பதிவை நீக்கி 2ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. வாதியின் வழக்கிற்கு 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் உறவு முறையை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் வாதிக்கு ஏற்கனவே 2ம் திருமணம் நடந்து

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:48:58 +0530

வாதியின் கொடுமைகளால் இருவரும் பிரிந்து சென்றுவிட்டனர் என்பதை மறைத்து, மூன்றாவதாக 1ம் பிரதிவாதியை திருமணம் செய்து கொண்டுள்ளதாகவும், 1ம் பிரதிவாதி வாதியிடம் அன்பாகவும், அனுசரணையாகவும் நல்ல மனைவியாக நடந்து கொண்டதால் வாதியே வழக்கு சொத்தை சட்டப்படி பதிவு செய்து 1ம் பிரதிவாதியிடம் வசம் ஒப்படைத்து விட்டதாகவும், அது முதல் வழக்கு சொத்தின் முழு உரிமையாளர் என்ற முறையில் 1ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றும், வாதியின் தனிப்பட்ட சுவாதீனத்தில் தாவா சொத்து இருந்ததில்லை என்றும், ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணப்படி இருவரும் ஒன்றாக தாவா சொத்தில் இருந்து வந்தனர் என்பது உண்மை என்றும், 1ம் பிரதிவாதி மனைவி என்ற முறையில் வாதியை நல்ல முறையில் பராமரித்து வந்தார் என்றும், வாதியின் நம்பிக்கைக்கு மாறாக 1ம் பிரதிவாதி செயல்படவில்லை என்றும், வாதி தன் மனைவி 1ம் பிரதிவாதியை பாதுகாக்காமல் கொடுமைக்கு உட்படுத்தி வந்துள்ளார் என்றும், சில சமயங்களில் 1ம் பிரதிவாதியை சந்தேகப்பட்டு வெளியே செல்லும் போது வீட்டை பூட்டிவிட்டு சென்று விடுவார் என்றும், வாதி மனம்மாறி பின்னிட்டு 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை மாற்றி எழுதி வைக்க கேட்டு 1ம் பிரதிவாதியை காட்டுமிராண்டி தனமாக அடித்ததாகவும், வாதி அவரது இரண்டு மனைவிகளையும் அடித்து துரத்தியது போல் 1ம் பிரதிவாதியையும் அடித்து விவாகரத்து செய்துவிட போவதாகவும் மிரட்டியதாகவும், இது குறித்து ஊர் பஞ்சாயத்தாரிடம் சொல்லி அவர்களது அறிவுறுத்தலின் படி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும், திருக்காளச்சேரி பஞ்சாயத்தார்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 1ம் பிரதிவாதி வாதி மீது புகார் எதுவும் தெரிவிக்கவில்லை என்றும், வாதி, 1ம் பிரதிவாதியை திருமணம் செய்து அழைத்து சென்ற பிறகு 1ம் பிரதிவாதி நகைகளை விற்று வந்த பணத்தை கொண்டு வாதியால் ஆர்.சி.சி. வீடு கட்டப்பட்டது என்றும், 2016ம் வருடம் 1ம் பிரதிவாதியை அடித்ததால் உயிரை காப்பாற்றிக் கொள்ள காரைக்காலில் உள்ள அவரது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், ஒன்றாக சேர்ந்து வாழ வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு விளக்கம் அளித்து 1ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதன் பிறகு இருதரப்பு வழக்கறிஞர்கள் மூலம் சமாதானம் பேசி இருவரும் சேர்ந்து வாழ்ந்ததாகவும், அதன் பிறகு சில நாட்கள் கழித்து வாதி வெளிநாடு சென்றுவிட்டு

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:49:03 +0530

2018 ம் ஆண்டு வாதி வெளிநாட்டிலிருந்து வந்து சிறிது காலத்தில் 1 ம் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்து அடித்து அனுப்பிவிட்டு தவறான சங்கதியின் அடிப்படையில் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதன் பிறகு ஊர் ஜமாத்தார்கள் தலையிட்டு இருவரையும் சேர்த்து வைத்து வாதி செய்த கொடுமைகளை மறந்து இருவரும் சேர்ந்து வாழ்ந்து வந்ததாகவும், அதன் பிறகு 2019 ம் வருடம் 1 ம் பிரதிவாதியை அடித்து காரைக்காலில் உள்ள அவரது தாயார் வீட்டிற்கு அனுப்பிவிட்டதாகவும், அந்த காலக்கட்டத்தில் வாதி காரைக்காலை சேர்ந்த மொஹைதீன் பீவி என்ற பெண்ணை அழைத்து வந்து தாவா வீட்டில் வைத்து குடும்பம் நடத்தி வந்ததாகவும், இந்த விவரம் ஊர்காரர்கள் மூலம் தெரிய வந்து வாதியிடம் கேட்டதற்கு அவரிடமும் பிரச்சனை ஏற்பட்டதால் பிரிந்து சென்றுவிட்டார் என்று கூறிவிட்டதாகவும், அதன் பிறகு வாதியும், 1 ம் பிரதிவாதியும் சுமூகமாக சேர்ந்து வாழ்ந்து வந்ததாகவும், அதன் பின்னிட்டு 1 ம் பிரதிவாதிக்கு தெரியாமல் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்து விட்டு வெளிநாடு சென்றுவிட்டதாகவும், நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையை பற்றி வாதியிடம் கேட்டதற்கு கோபத்தில் வழக்கினை தாக்கல் செய்து விட்டதாகவும், வாபஸ் பெற்றுவிடுகிறேன் என கூறிவிட்டு அதன் படி நடந்து கொள்ளவில்லை என்றும், வாதி 1 ம் பிரதிவாதிக்கு பல வகையில் மன உளைச்சலை கொடுத்து வந்தாலும், மனைவியாக செய்யவேண்டிய கடமைகளிலிருந்து தவறவில்லை என்றும், 13.03.2006 ம் தேதியிட்ட ஹிபா செட்டில்மெண்ட் பத்திரப்படி வாதி தாவா சொத்தில் வசித்து வருவதை தடுக்கவில்லை மற்றும் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றும், வாதி எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் 1 ம் பிரதிவாதி முழு உரிமையாளராக வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார் என்றும், எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்யக்கோரியுள்ளார்.

10. இவ்வழக்கில் வாதி தரப்பு சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் வழக்கு சொத்து குறித்து வாதியின் சகோதர, சகோதரிகள் 06.05.1993 ம் தேதியில் வாதிக்கு எழுதி கொடுத்துள்ள சுத்த கிரய சாசனம் மற்றும் பாகப்பாத்திய விடுதலை பத்திரம் சான்று நகல் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகவும், வாதி பெயரில் உள்ள தாவா சொத்தின் வீட்டு வரி ரசீது மற்றும் மின் கட்டண ரசீது வா.சா.ஆ.3 மற்றும்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:49:08 +0530

வா.சா.ஆ.4 ஆகவும், 13.03.2006 ம் தேதியில் 1 ம் பிரதிவாதிக்கு வாதி எழுதி வைத்த ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்று நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 27.08.2018 தேதியில் வாதியுடன் சேர்ந்து வாழ கோரி 1 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.6 ஆகவும், 09.10.2018 ம் தேதியில் வாதி நாகப்பட்டினம் காவல் கண்காணிப்பாளருக்கு கொடுத்த புகார் மனு நகல் வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11. இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் வழக்கு சொத்துக்கான வில்லங்கச் சான்று பி.வா.சா.ஆ.1 ஆகவும், 13.03.2006 தேியிட்ட வழக்கு சொத்து குறித்து வாதி, 1 ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்று நகல் பி.வா.சா.ஆ.2 ஆகவும், 20.05.2008 தேதியிட்ட தரங்கம்பாடி மண்டல துணை வட்டாட்சியரின் செயல்முறை உத்தரவு பி.வா.சா.ஆ.3 ஆகவும், 1 ம் பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 ஆகவும், 21.07.2018 ம் தேதியில் 1 ம் பிரதிவாதி காரைக்கால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ரசீது பி.வா.சா.ஆ.6 ஆகவும், 22.07.2018 தேதியில் 1 ம் பிரதிவாதி சிகிச்சை பெற்றுக்கொண்டதற்கான மருத்துவ சீட்டு பி.வா.சா.ஆ.7 ஆகவும், வழக்கு சொத்திற்கு 1 ம் பிரதிவாதி பெயரில் உள்ள நத்தம் பட்டா பி.வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

12. இவ்வழக்கில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தம்முடைய சாட்சியத்தில் தம்முடைய பூர்வீகம் திருக்களாச்சேரி என்றும், வேலை நிமித்தமாக பிரான்ஸ் நாட்டிற்கு சென்று வருவதாகவும், அங்கு வியட்நாமை சேர்ந்த Thi Hong Hoa Nguyen என்ற பெண்மணியை திருமணம் செய்து ஒரு பெண் குழந்தை பிறந்து தற்பொழுது பிரான்ஸில் வசித்து வருவதாகவும், அதன் பிறகு சங்கரன் பந்தலை சேர்ந்த அப்துல் சலாம் என்பவரின் மகள் சம்சாத் பேகம் என்பவரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டதாகவும், இரண்டாவது மனைவி மூலமாக குழந்தைகள் இல்லை என்றும், இரண்டாவது திருமணம் செய்து கொண்டதாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும், இரண்டாவது மனைவியிடமிருந்து விவாகரத்து பெற்ற பின்னர் மற்றொரு திருமணம் செய்து கொண்டதாகவும், தனக்கும்,

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:49:14 +0530

1வது பிரதிவாதிக்கும் 28.08.1998 அன்று திருமணம் நடைபெற்றது என்றும், அது இருவருக்கும் மறுமணம் என்றால் சரிதான் என்றும், திருமணத்தின் போது முதல் பிரதிவாதிக்கு அவரது முதல் கணவர் மூலமாக அப்துல் ரசாக் என்ற மகன் இருந்தார் என்றும், 1ம் பிரதிவாதியின் மகனையும் தான் பராமரிப்பதாக உத்திரவாதம் அளித்ததாகவும், முதல் பிரதிவாதியின் பெயரில் வா.சா.ஆ.5 ஹிபா செட்டில் மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான் என்றும், ஹிபாவை ரத்து செய்வதற்காக 2019 ல் வழக்கு போட்டதாகவும், 2019 ல் 13 ஆண்டுகள் கழித்து வழக்கு போட்டுள்ளதாகவும், மேற்படி ஹிபா செட்டில்மெண்ட் ஆவணத்தில் வசிப்பிட உரிமையை தக்க வைத்துக்கொண்டேன் என்றாலும், சொத்துரிமையை தக்க வைத்துக்கொள்ளவில்லை என்றாலும் சரிதான் என்றும், தம்முடைய வழக்குரையில் 2016 ல் ஜனவரியில் 1ம் பிரதிவாதி வீடு புகுந்து நகைகள் மற்றும் அனைத்து ஆவணங்களையும் திருடி சென்றுவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் என்றும், அந்த காலக்கட்டத்தில் தான் பிரான்சில் இருந்ததாகவும், முதல் பிரதிவாதியுடன் தனக்கு திருமணமானது முதல் வழக்கு போடும் நாள் வரை தாவா வீட்டில் இருந்தோம் என்றால், தான் வெளிநாட்டில் இருந்தேன் என்றும், முதல் பிரதிவாதி தாவா வீட்டில் இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

13. இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1 ஆக திருக்களாச்சேரி ஜமாத் தலைவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தம்முடைய சாட்சியத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பு வாதிக்கும், முதல் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றும், காவல் நிலையத்திற்கு வாதி, முதல் பிரதிவாதி மற்றும் தானும் சென்றதாகவும், காரைக்கால் ஜமாத்திலும் வந்திருந்ததாகவும், போலிசார் காவல் நிலையம் வரவேண்டாம் ஜமாத்தில் பேசி அவர்களை சேர்த்து வையுங்கள் என்று சொன்னார்கள் என்றும், ஆனால் அவர்கள் இருவரும் ஜமாத்திற்கு கட்டுப்படவில்லை என்றும், காவல் நிலையத்தில் பேசி வாதியிடம் இருந்து ஆவணத்தை வாங்கி தங்களிடம் கொடுத்து சுமூகமாக பேசி தீர்த்து வைக்குமாறு சொன்னார்கள் என்றும், தங்களுக்கு தரப்பினர்கள் கட்டுப்படவில்லை என்பதால் அந்த ஆவணத்தை சார்புதீனிடமே திருப்பி கொடுத்துவிட்டதாகவும், அது வீட்டின் அசல் ஆவணம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:49:19 +0530

14. இவ்வழக்கின் பிரதிவாதி பி.வா.சா.1 விசாரணைக்கு பிறகு நீதிமன்ற அனுமதியுடன் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பி.வா.சா.2 தம்முடைய நீதிமன்ற சாட்சித்தில் வாதி தன்னுடைய இரண்டாவது கணவர் என்றும், இரண்டாவது திருமணத்தின் பயனாக குழந்தைகள் இல்லை என்றும், வாதிக்கு, முதல் திருமணம் ஆனது தெரியும் என்றும், வாதி மற்றொரு திருமணம் செய்துள்ளதை தன்னிடம் மறைத்துவிட்டதாகவும், தற்போது தாவா சொத்தில் வாதி இல்லை என்றும், வெளியே வேறு ஒரு பெண்ணுடன் இருப்பதாகவும், வாதி வீட்டிலிருந்து சென்று 6 வருடங்கள் இருக்கும் என்றும், தான செட்டில்மெண்ட் கொடுத்த பிறகு ஆவணங்கள் அனைத்தும் தன் பெயரில் உள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட பி.வா.சா.3 தம்முடைய சாட்சியத்தில் வாதி, முதல் பிரதிவாதி இடையே கடந்த 10 ஆண்டுகளாக சச்சரவுகள் ஏற்பட்டுள்ளதாகவும், ஜமாத்தார்கள் மூலம் பல முறை பேச்சு வார்த்தை நடந்தும் இருவரும் ஒத்து போகவில்லை என்றும், திருக்களாச்சேரி மற்றும் காரைக்கால் இரண்டு ஜமாத்துக்களும் சேர்ந்து தான் பேசினார்கள் என்றும், இந்த சம்பவம் நடந்து 2, 3 ஆண்டுகள் இருக்கும் என்றும், 2 வருடங்களாக இருவரும் பிரிந்து இருக்கிறார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

15. இவ்வழக்கில் இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி கணவன் மனைவி உறவு முறை என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் வா.சா.ஆ.5 13.03.2006 தாவா சொத்துக்குறித்து வாதி, முதல் பிரதிவாதிக்கு மனைவி என்ற முறையில் ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்பதும், மேற்படி ஆவணத்தில் வாதி ஆயுள் வரை வழக்கு சொத்து வீட்டில் தங்கும் உரிமையை தக்க வைத்து உள்ளார் என்பதும், மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்திலேயே எக்காரணம் கொண்டும் பத்திரத்தை மாற்றவோ, ரத்து செய்யவோ அதிகாரம் இல்லை என்று எழுதப்பட்டுள்ளது என்பதும் வாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை ரத்து செய்யக் கோரி இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியின் வழக்குரை மற்றும் முதல் விசாரணை சாட்சியத்தில் வாதிக்கும், முதல் பிரதிவாதிக்கும் திருமணமாகி 16 ஆண்டுகள் நல்ல முறையில் குடும்பம் நடத்தி வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி,

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:49:26 +0530

முதல் பிரதிவாதிக்கு இடையே 28.08.1998ம் தேதியில் திருமணம் நடைபெற்றதாக வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் திருமணமாகி 8 ஆண்டுகள் கழித்து 13.03.2006ம் தேதியில் வா.சா.ஆ.5 ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணம் முதல் பிரதிவாதிக்கு, வாதியால் எழுதி வைக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் பரிசீலனையில் தாவா சொத்தில் ஆயுள் வரை குடியிருக்கும் உரிமையை வாதி தக்க வைத்துக்கொண்டுள்ளதாகவும், வாதியின் மற்ற வாரிசுகளுக்கு சொத்தில் பாத்தியமோ, சம்மந்தமோ, பின் தொடர்ச்சியோ கிடையாது என்றும், எக்காரணம் கொண்டும் பத்திரத்தை மாற்றவோ, ரத்து செய்யவோ தனக்கு அதிகாரம் இல்லை என்றும், அதற்கு ஆதாராமாக செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களையும் முதல் பிரதிவாதியிடம் கொடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

16. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணப்படி முதல் பிரதிவாதி வழக்கு சொத்தின் பட்டா மாறுதல் பெற்று தாவா சொத்தை முழு உரிமையுடன் அனுபவித்து வருகிறார் என்பது தெரியவருகிறது. மேலும் பிரதிவாதி தரப்பில் செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் படி தாவா வீட்டில் வாதி தங்கிக் கொள்ளும் உரிமையை முதல் பிரதிவாதி மறுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வா.சா.ஆ.5 ஹிபா என்கிற தான செட்டில் மெண்ட் ஆவணம் 2006-ல் வாதியால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய உரிய காலத்தில் வாதி தரப்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. 2006-ல் ஆவணம் எழுதப்பட்டு 2019ம் ஆண்டு தான் மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், வழக்கு போடும் வரை தாவா வீட்டில் 1ம் பிரதிவாதி தான் இருந்தார் என்பதும், வாதி வெளிநாட்டில் இருந்ததாகவும், வாதி தரப்பு சாட்சியத்திலேயே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

17. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து வா.சா.ஆ.5 ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணப்படி தாவா சொத்தை முதல் பிரதிவாதி அடைந்து முழு உரிமையுடன் அனுபவித்து வருகிறார் என்பது இருதரப்பு சாட்சி மற்றும்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:49:32 +0530

சான்றாவணங்கள் மூலம் தெரியவருகிறது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய உரிய காலத்தில் சட்ட நடவடிக்கை வாதி தரப்பில் மேற்கொள்ளப்படவில்லை, எனவே 13.03.2006 ம் தேதியிட்ட ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லும் தன்மையுடையது என்றும், வாதியை கட்டுப்படுத்தக்கூடியது என்றும் தீர்மானித்து எழுவினா 1–க்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>18. எழுவினா 2 முதல் 4–க்கான தீர்வு :</u>**

மேற்கண்ட எழுவினா–1 வாதிக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதால் வழக்கில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம், செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று எழுவினாக்கள் 2 முதல் 4 க்கு தீர்வு காணப்படுகிறது.

**19. முடிவாக,** வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று தீர்மானித்து இவ்வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 16–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:49:37 +0530

சார்பு நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 திரு. முகம்மது சார்புதீன் (வாதி)

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 06.05.1993 | வழக்கு சொத்து குறித்து வாதியின் சகோதர சகோதரிகள் எழுதி கொடுத்துள்ள சுத்த கிரய சாசனம் சான்று நகல் |
| வா.சா.ஆ.2 | 06.05.1993 | வழக்கு சொத்து குறித்து வாதியின் சகோதர சகோதரிகள் எழுதி கொடுத்துள்ள பாகப்பாத்திய விடுதலை பத்திரம் சான்று நகல் |
| வா.சா.ஆ.3 | 10.11.2022 | வாதி பெயரில் உள்ள தாவா சொத்தின் வீட்டு வரி ரசீது |
| வா.சா.ஆ.4 | 10.01.2024 | வாதி பெயரில் உள்ள மின் கட்டண ரசீது |
| வா.சா.ஆ.5 | 13.03.2006 | 1ம் பிரதிவாதிக்கு வாதி எழுதி வைத்த ஹிபா என்கிற தான |

| | | |
|---|---|---|
| | | செட்டில்மெண்ட் பத்திரம் சான்று நகல் |
| வா.சா.ஆ.6 | 27.08.2018 | 1ம் பிரதிவாதிக்கு வாதியுடன் சேர்ந்து வாழ கோரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ.7 | 09.10.2018 | வாதி நாகப்பட்டினம் காவல் கண்காணிப்பாளருக்கு கொடுத்த புகார் மனு நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>**

பி.வா.சா.1 திரு. முகமது ரஃபீக்

பி.வா.சா.2 திருமதி. மெகருன்னிசா (1ம் பிரதிவாதி)

பி.வா.சா.3 திருமதி. மும்தாஜ்பேகம்

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 02.11.2022 | வழக்கு சொத்து குறித்து வில்லங்கச் சான்று |
| பி.வா.சா.ஆ.2 | 13.03.2006 | வழக்கு சொத்து குறித்து வாதி, 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த ஹிபா என்கிற தான செட்டில்மெண்ட் ஆவணப் பத்திரம் சான்று நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 20.05.2008 | தரங்கம்பாடி மண்டல துணை வட்டாட்சியரின் செயல்முறை உத்தரவு |
| பி.வா.சா.ஆ.4 | 29.11.2010 | 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது |
| பி.வா.சா.ஆ.5 | 12.12.2011 | 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது |
| பி.வா.சா.ஆ.6 | 21.07.2018 | 1ம் பிரதிவாதி காரைக்கால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ரசீது |
| பி.வா.சா.ஆ.7 | 22.07.2018 | 1ம் பிரதிவாதி சிகிச்சை பெற்றுக்கொண்டதற்கான மருத்துவ சீட்டு |
| பி.வா.சா.ஆ.8 | 04.01.2025 | 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள வழக்கு சொத்திற்கான நத்தம் பட்டா எண்.1454 |

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.16 18:49:43 +0530

சார்பு நீதிபதி, சீர்காழி.

நேரிய/ வரைவு தீர்ப்புரை
அசல் வழக்கு எண். 144/2023
நாள் – 16.03.2026